முருகப்பெருமான் துணை

ஆசான் அரங்கமகா ஞானியர்க்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1391

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

21.07.2023, வெள்ளிக்கிழமை

1. ஞானிகளின் பலம் கொண்ட அரங்கனே
   ஞானவேலிகொண்ட தேசிகனே
   வானவர்கள் போற்றுகின்ற குருராஜனே
   வள்ளலே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
2. யானுமே ஞான அறிவுரை ஆசி
   (சோபகிருது வருடம் ஆடி மாதம் 05 ம் நாள், 21.07.2023, வெள்ளிக்கிழமை)
   ஞானபலம் அரங்கனுக்கு கூடிட உரைப்பேன்
   வானவர்கள் தொடர்ந்து அருளிவர
   வள்ளல் தன்மை அரங்கனுக்கு பெருகிவர
3. தாழ்விலா அரங்கன் திருவடி பற்றி
   தரணியோர் தொடர்ந்துவந்தால் போதும்
   போதுமப்பா உலகம் ஞானலோகம்
   புண்ணியபலம் கொண்ட தர்மலோகமாக
4. காலனையே வெல்லுகின்ற மகா சக்தி நிறைந்த
   கலியுகத்தில் ஞானிகள் கூட்டம் பெருகியே
   பெருகியே உலக மாற்றம் பேரானந்தகதியாய் அரங்கன் மூலம் நடந்தேறும்
   முருகப்பெருமான் யானும் வெளிப்பட்டு முழுமை ஞானம் தந்தருளி இனிதே
5. தர்ம குணம் மக்களிடை உருவாக்கி
   தரணியெங்கும் தர்மத்தை பெருக்கி
   பெருக்கியே ஞானிகள் ஆட்சி
   பிசகில்லா ஞானவான் ஆட்சி
6. வருத்தமில்லா சடுதி வையகத்தில்
   வடிவேலன் யான் படைத்து அருள்புரிவேன்
   அருளவே அரங்கன் வழிவர
   அகிலத்தில் மாற்றமும் அற்புதமும் சடுதி அரங்கேறும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–